# அலகு - 5

# இதழ்களின் பகுப்பும் அமைப்பும்

## இதழ்களின் வகைகள்

### 1. செய்தி இதழ்கள்

சில நாளிதழ்கள் செய்திகளுக்காகவே வெளியிடப்படுகின்றன. அச்செய்திகளை ஒருவித பரபரப்புடன் வெளியிடும் தாள்களும் உண்டு. பேச்சுமொழி பயின்று வரும் செய்தி இதழ்கள் மிகுந்த செல்வாக்கினைப் பெறலாயின. 'தினமணி', 'தினத்தந்தி' முதலானவற்றைச் சான்றாகக் கூறலாம்.

### 2. சமய இதழ்கள்

சமய இதழ்கள் மூலம் மக்களிடையே பக்தியை வளர்த்தல், ஒழுக்க உணர்வுகளை நிலைநிறுத்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல் முதலானவற்றை நோக்கமாகக் கொண்டு 'ஞானபூமி', 'காமகோடி' முதலிய இதழகள் செயல்பட்டு வருகின்றன.

### அ) இந்துச்சமய இதழ்கள்

கிறித்துவப் பாதிரிமார்களின் பிரசாரம் "இரட்டைக்குழல் துப்பாக்கி" போல இருந்தது என்கிறார். அ.மா.சாமி. தங்கள் சமயத்தைப் பரப்பிய அதே சமயத்தில் இந்து சமயத்தைப் பழித்தனர். இதனால் இந்துக்கள் சிலர் கோபமுற்றனர். கிறித்தவர்களுக்குப் பதில் அளிக்க இந்துக்கள் சில இதழ்களைத் தொடங்கினர்.

இந்து சமயத்தின் முதல் இதழ் 'தத்துவ போதினி' 1864 இல் வெளயிடப்பட்டது. சென்னையில் அச்சிட்டனர். அடுத்த ஆண்டு 'விவேக விளக்கம்' என்ற இன்னோர் இதழ் வெளியிடப்பட்டது. தொடர்ந்து தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் பல சமய இதழ்கள் வெளியிடப்பட்டன.

சில இதழ்கள் இந்துச்சமயச் சீர்த்திருத்தத்திலும் ஈடுபட்டன. 1883 இல் 'இந்துமதச் சீர்திருத்தி' என்ற பெயரில் ஓர் இத்ழ் வெளிவந்தது. 1887ஆம் ஆண்டு திருச்சியில் 'எம்பதம் ஆண்டவன்' என்ற ஏடு

Scanned by CamScanner

வெளியிடப்பட்டது. இவ்வேட்டில் ஜுன் 18ஆம் தேதியில் வெளிவந்த அறிக்கை ஒன்று பின்வருமாறு:

"கோவில்களின் நிர்வாகத்துக்கு அரசாங்கம்
சட்டம் செய்தால் மட்டும் போதாது. மடங்களின்
சொத்துக்களை நிர்வகிக்கவும் சட்டம் கொண்டு
வரவேண்டும். இந்து சமயப் பிரசாரத்துக்காக
இந்த மடங்கள் ஏற்பட்டன. ஆனால் இதற்காக ஏதும்
செலவழிக்கப்படுவதில்லை" (எம்பதம் ஆண்டவன் இதழ்)

தற்பொழுது இந்து மடங்களில் இருந்து 'குமர குருபரன்' 'திருஞான சம்பந்தம்' முதலான இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்து அறநிலையம் 'திருக்கோவில்' என்ற இதழை வெளியிட்டு வருகிறது. திருப்பதி கோவில் நிர்வாகித்தினர் 'சப்தகிரி' என்ற இதழ் வெளியிட்டு வருகின்றனர்.

## இந்துச்சமய இதழ்கள்

| | | |
|---|---|---|
| 1. | தத்துவ போதினி | – 1864 |
| 2. | விவேக விளக்கம் | – 1865 |
| 3. | இந்துமத சீர்திருத்தி | – 1883 |
| 4. | எம்பதம் ஆண்டவன் | – 1887 |
| 5. | குமரகுருபரன் | – இந்து மடங்கள் |
| 6. | திருஞானசம்பந்தம் | – இந்து மடங்கள் |
| 7. | திருக்கோவில் | – இந்து அறநிலையம் |
| 8. | சப்தகிரி | – திருப்பதி கோவில் |
| 9. | சிவசக்தி | |
| 10. | திருக்கயிலை | |
| 11. | வீரமணிகண்டன் | |
| 12. | தர்மசக்கரம் | |
| 13. | காமகோடி | |
| 14. | ஜெகத்குரு | |
| 15. | இந்துமித்திரன் | |
| 16. | ஓங்காரம் | |
| 17. | கலாச்சாரம் | |
| 18. | ஞானமித்திரன் | |
| 19. | வேதாந்த தீபிகை | |
| 20. | வைதீக சித்தாந்த தீபிகை (1890) | |

Scanned by CamScanner

## ஆ. இசுலாமிய இதழ்கள்

தமிழுக்குத் தொண்டு புரிந்த இசுலாமியர்கள் பலர். மற்ற சமயத்தவர்களைப் போலவே இசுலாமியரும் தங்கள் கருத்துக்களைப் பரப்ப இதழ்களை நடத்தினர். முதல் இசுலாமியத் தமிழ் இதழ் 'முசுலீம் நேசன்'. இலங்கையில் வெளியிடப் பட்டது. வாரமிருமுறை இதழாக வெளிவந்தது. இவ்விதழின் ஆசிரியர் சித்திக் லெப்பை மரக்காயர்.

**இசுலாமிய இதழ்கள்**

1. முசுலீம் நேசன் – சித்திக் லெப்பை மரக்காயர் – இலங்கை
2. நர்கீசு – திருச்சி –பெண்களுக்காக வெளிவரல்
3. உஜ்ஜத்
4. மணிவிளக்கு
5. முஸ்லீம் முரசு
6. பிறை
7. முபாரக்
8. அல் இசுலாம்
9. பாத்திமா
10. பரீதா
11. பாத் உல் இசுலாம்
12. உரிமைக்குரல்

## இ) கிறித்தவச் சமய இதழ்கள்

அனைத்து நாடுகளிலும் செய்தித் தொடர்புக்குத் தான் இதழ்கள் தோன்றின. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் சமய வளர்ச்சிக்காக பல இதழ்கள் தோன்றின. சமயச் சண்டை காரணமாக இதழ்கள் வளர்ச்சி அடைந்தன. இதனைத் தமிழிதலியலின் 'தனிச்சிறப்பு' என்றும் கூறலாம்.

இந்தியாவில் வாணிகம் செய்ய ஐரோப்பியர்கள் வந்தனர். ஆனால் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதில் இவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன் செயலாற்றினர். இந்தச் சமயப் பணிக்காகவே இவர்கள் அச்சகங்களை அமைத்தனர்; இதழ்களை வெளியிட்டனர்.

1. **1812 – மாசத்தனச் சரிதை**
2. **மிஷினரி கிளீனர்**
3. **தமிழ் குவார்ட்டர்லி ரிபோசிட்டரி – தமிழ் இதழ்கள்**
4. **லேம்ப் ஆப் டிருத்**
5. **1833 – இராஜவிருத்தி போதினி – வார இதழ்**
6. **1838 – விருத்தாந்தி**

Scanned by CamScanner

7. 1840 – 'த அரோரா' – மாதம் இருமுறை
8. 1840 – 52 – பாலதீபிகை – நாகர்கோவில்
9. சுவிசேஷ பிரபாவ விளக்கம்
10. ஜனசிநேகன்
11. உதயதாரகை
12. நற்போதகம் – 1849
13. தமிழ் சுவிசேஷஹூத்தரன் மாதாந்திர சலுகை – 132 ஆண்டுகள்
14. தரங்கை நேசன் – 1849
15. சென்னை திருச்சபை பத்திரிகை – 1863
16. வேதவிளக்கம் – 1890
17. சலேசியச் செய்தி மலர்
18. அரும்பு
19. இயேசுவின் குரல்
20. நம்வாழ்வு இனிப்பு
21. மகிழ்ச்சி
22. மனைமலர்
23. மறைவழி

## பகுத்தறிவு இதழ்கள்

கடவுள் மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, மூடப்பழக்கங்களைச் சாடுதல் முதலானவை இவ்விதழ்களில் காணப்பெறும். சீர்திருத்த எழுத்து முறையை மக்கள் பின்பற்றுவதற்குரிய விழிமுறைகள் குறித்துப் 'பகுத்தறிவு', 'உண்மை' முதலான இதழ்களில் காணலாம்.

## இதழ்கள்

1. பகுத்தறிவு
2. உண்மை
3. விடுதலை – நாளிதழ் – ஈ.வே.இராமசாமி
4. குத்தூசி – இதழ்
5. போர்வாள்+

## தனித்தமிழ் இதழ்கள்

தூயதமிழ், தமிழினம், மொழி, பண்பாடு, தமிழ்நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி குறித்து வெளியிடுவது 'தென்மொழி' இதழின் முதன்மையான நோக்கமாகும். இது போன்ற இதழ்கள் தமிழிதழியலில் மிகமிகக் குறைவாகும்.

Scanned by CamScanner

## இலக்கிய இதழ்கள்

இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி, திறனாய்வு கட்டுரைகள், இலக்கியத் தரம் வாய்ந்த கவிதைகள் முதலானவற்றை மக்களுக்கு வழங்குவது 'செந்தமிழ்', 'செந்தமிழ்ச் செல்வி', 'தமிழ்ப் பொழில்' முதலிய இதழ்களின் கொள்கைகளாகும்.

## அட்டைப்படம்

இன்றைய இதழ்களில் அட்டைப்படத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. அட்டைப்படம் கவர்ச்சிகரமாக அமைய இதழ்கள் கவனம் செலுத்துகின்றன. தொடக்கத்தில் மெல்லிய வண்ணத்தாளை அட்டையாகப் பயன்படுத்தினார்கள். அட்டையில் இதழின் பெயர், வெளியீட்டு நாள், மலர் இதழ், விலை ஆகிய விவரங்கள் அச்சிடப்பட்டன. இதழின் முத்திரை, முழக்கம் ஆகியவற்றை அட்டையில் காணலாம். சில இதழ்களில் பக்கங்களுக்கு அடியில் பழமொழிகள், பொன்மொழிகள் இடம் பெற்றன.

தொடக்கக் காலத்தமிழ் இதழ்களில் விளம்பரம் இல்லை. பின்னர் வருமானத்திற்காக விளம்பரங்களை வெளியிட்டனர். முதலில் இதழின் கடைசிப் பக்கத்தில் விளம்பரங்களை வெளியிட்டனர். பின்னர் எல்லா பக்கங்களிலும் விளம்பரங்களை வெளியிட்டனர்.

## இலக்கிய இதழ்கள் பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இந்துஜன பூஷனம் | – | சென்னை வார இதழ் | – | 200 படிகள் |
| 2. | வெற்றிக்கொடியோன் | – | ,, | – | 250 படிகள் |
| 3. | சுதேசாபிமானி | – | ,, | – | 480 படிகள் |
| 4. | தத்துவ விவேகி | – | சென்னை வார இழ் | – | 140 படிகள் |
| 5. | சூஜனமனோரஞ்சனி | – | பாளையங்கோட்டை வார இதழ் | – | 220 படிகள் |
| 6. | சுதேசமித்திரன் | – | சென்னை, வாரமிருமுறை | – | 1120 படிகள் |
| 7. | லலித பிரசனோதயா | – | சென்னை நாளிதழ் | – | 150 படிகள் |
| 8. | கலாநிதி | – | வாரமிருமுறை, கோவை | – | 275 படிகள் |
| 9. | சுதேசாபிமானி | – | வாரமிருமுறை, சேலம் | – | 150 படிகள் |
| 10. | பிரமஞான போதினி | – | வாரமிருமுறை, பெங்களூர் | – | 110 படிகள் |
| 11. | திராவிட வர்த்தமானி | – | வாரமிருமுறை, பெங்களூர் | – | 250 படிகள் |

## சாதி இதழ்கள்

வேறு எந்த மொழியிலும் இல்லாத இதழியல். துறையின் பிரிவாக அமைந்தது சாதி இதழ்களாகும். தம்து சமூகத்தாரின் இன ஒற்றுமை, முன்னேற்றம், சிறப்புகள், நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை வெளியிடுவது இவ்விதழ்களின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

Scanned by CamScanner

1. செங்குந்தமித்திரன்
2. வேளாண் கூட்டமைப்பு
3. செட்டிநாடு
4. நகரத்தார் குரல்
5. குலவேளாளர்
6. முத்தரையர் முழக்கம்
7. தேவர் முரசு
8. நாயுடு சமுதாயம்
9. நாடார் நண்பன்
10. நாடார் குலதீபம்
11. கிராமணி குலம்
12. வன்னிய முரசு
13. சாலியர்குரல்
14. செங்குந்தன்
15. செங்குந்தர் முரசு
16. யாதவமித்திரன்

## மகளிர் இதழ்கள்

பெண்களுக்கு மகிழ்வூட்டும் செய்திகள், சமையல் குறிப்புகள், விழிப்புணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் அமையப்பெறும் கருத்துகள் முதலியன இவ்விதழ்களில் முதன்மையானவைகளாகக் கருதப்பெறும்.

1. 1860 – அமிழ்தவசனி – முதல் தமிழ் மகளிர் இதழ்
2. 1883 – சுகுணபோதினி – மாதமிருமுறை
3. 1887 – மாதர் மித்திரி
4. 1891 – பெண்மதி போதினி
5. 1896 – மகாராணி
6. 1898 – மாதர் மனோரஞ்சனி – அரசாங்க உதவிப்பணம் கிடைத்தது.
7. சக்கரவர்த்தினி
8. தமிழ்மாது
9. பெண்கல்வி
10. சிந்தாமணி
11. தமிழ் மகள்
12. கிரகலட்சுமி
13. பாவை
14. மாதர் மறுமணம்

    1936 – ஆசிரியர் மரகதவல்லி – கலப்பு மணம், விதவை மணம் கட்டுரைகள்
15. மங்கை.
16. மங்கையர் மலர்
17. ராஜம்
18. மல்லிகை மலர்

Scanned by CamScanner

## சிறுவர் இதழ்கள்

சிறுவர்களுக்கு அறிவூட்டும் நீதிக்கருத்துகளைப் படைப்பாற்றல் மூலம் வழங்குதல், அறிவியல், பக்தித் தொடர்பான செய்திகளை அளித்தல் முதலானவை சிறுவர் இதழ்களின் கொள்கைகளாகும்.

1. 1840 – பாலதீபிகை – நாகர்கோவில் – முதழ் குழந்தைகள் இதழ்
2. பாப்பா மலர்
3. அணில்
4. கல்வி
5. சிறுமி
6. மிட்டாய் 11. டுமில்
7. மத்தாப்பு 13. மான்
8. மயில்
9. சங்கு
10. வானவில்
11. பூஞ்சோலை
12. பாலர் ராஜ்ஜியம்
13. அம்புலிமாமா
14. பாப்பா
15. ஜில்ஜில்
16. சித்திரக்குள்ளன்
17. அம்பி
18. டுமில்
19. மான்
20. முயல்
21. கோமாளி
22. சிறுவர் முரசு
23. டமாரம்
24. கோகுலம்
25. இளந்தளிர்

## பொழுதுபோக்கு இதழ்கள்

பொழுதுபோக்கிற்குத் தேவையான நகைச்சுவைத் துணுக்குகள், கலைஞர்களின் கருத்துகள், திரைப்பட விளம்பரங்கள், செய்திகள் முதலானவற்றை இவ்விதழ்களின் மூலம் மக்களுக்கு வழங்கப் பெறுகின்றன. (உ.ம்) குமுதம், ஆனந்தவிகடன்.

## பொதுவுடைமைக் கொள்கை இதழ்கள்

சுரண்டல், ஊழல், வறுமை, வரதட்சனைக் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வர்க்கப் போராட்டம் முதலான சமுதாயப் பிரச்சனைகள் குறித்து வெளியிடுவதை 'செம்மலர்', 'சரஸ்வதி', 'தாமரை', 'மனஓசை' முதலான இதழ்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## கலையிதழ்கள்

கலைத் தொடர்பான செய்திகள், கலைஞர்கள் பற்றிய செய்திகள் வெளியிடுவதே இவ்விதழ்களின் நோக்கமாகும். பாலு சகோதரர்கள் நடத்திய கலை', ஆறு. அழகப்பனின் 'நாடகக்கலை', தென்னிந்திய நடிகர் சங்கம் நடத்திய 'நடிகன் குரல்' முதலானவற்றைச் சான்றாகக் கூறலாம்.

## கல்வி இதழ்கள்

கல்வி வளர்ச்சிக்கும் அப்பணியை ஆற்றிய ஆசிரியர்களுக்கும் தனி இதழ்கள் வெளிவந்தன.

Scanned by CamScanner

1. 1879 – நடுத்தர, உயர்தரப்பள்ளி நண்பன்
2. 1887 – உபாத்தியாயர்
3. 1887 – கிராமப்பள்ளி ஆசிரியன்
4. 1892 – மாணவர் போதகன் – கிறித்தவ சமயத்தார் வெளியிடல்
5. 1897 – தமிழ்க்கல்விப் பத்திரிகை
6. 1905 – நல்லாசிரியன்
7. 1928 – (அனுபவ ஆசான், போதனை முறைப் பூங்கொத்து) ஆசிரியர்க்கான இதழ்கள்
8. 'தொழில்கல்வி' 'தொழிலாசிரியன்' } – தொழில் கல்வி தொடர்பான இதழ்கள்.

## வேளாண்மை இதழ்கள்

1. விவசாய தீபிகை – ஆசிரியர் என். வானாமாமலை
2. விவசாய வர்த்தினி
3. சவுத் இந்தியன் அக்ரிகல்சர்
4. கிருஷிகன்
5. ஏல விவசாயி
6. இந்திய விவசாயம்
7. மேழிச்செல்வம்

## கிராம இதழ்கள்

1. கிராம பரிபாலனம்
2. கிராம வாழ்க்கை
3. கிராம பஞ்சாயத்து
4. கிராம போதினி
5. கிராம முன்னேற்றம்
6. கிராம ஊழியன்
7. கிராம தூதன்
8. கிராம சேவை

## அறிவியல் இதழ்கள்

அறிவியற் கட்டுரைகள், புதிய கண்டுபிடிப்புகள் போன்ற விவரங்களைத் தருதல், தமிழில் கலைச் சொற்களை வழங்குவது போன்றவை அறிவியல் இதழான 'கலைக்கதிரின்' கொள்கையாகும்.

தமிழர்களின் பழமை மருத்துவமான சித்த வைத்தியம், ஆரியர்களின் ஆயுர்வேதம், முஸ்லீம்களின் யுனானி, ஜெர்மானியர்களின் ஒமியோபதி,

Scanned by CamScanner

ஆங்கிலேயர்களின் அல்லோபதி ஆகிய அனைத்து முறைகளுக்கும் தனித்தனி இதழ்கள் வெளியிடப்பட்டன.

1. 1870 – அகத்திய வர்த்தமானி – முதல் வைத்திய இதழ்
2. 1891 – சுகாதார போதினி
3. 1908 – ஆரோக்கிய வழி, ஆயுர்வேத பாஸ்கரன்
4. 1916 – தமிழ் விஞ்ஞானச் சொற்கழகம் (இராஜாஜி டி.ஜி.வெங்கட் சுப்பையா)
5. 1917 – மாதவய்யா – தமிழ்நேசன் – மாத இதழ் – ஆராய்ச்சிக் கட்டுரைகள்.
6. 1920 – வைத்திய போதினி – கும்பகோணம் – ஆங்கில மருத்துவ முறைகள்
7. 1926 – இயற்கை – மாத இதழ் – சுத்தானந்த பாரதியார்
8. கலைக்கதிர் – அறிவியல் இதழ்
9. 1929 – விவேக போதினி – அக்டோபர் இதழ் – 88 அறிவியல் சொல் – தமிழ்ச் சொற்கள்
10. 1933 – கா.நமச்சிவாயர் – தமிழ்க்கடல் – சென்னை – அறிவியல் இதழ்
11. மூலிகை மணி – 'உடல் நலம்', 'ஹெல்த்', 'மருத்துவ நலம்', 'நமது உடல்',

## விளையாட்டு இதழ்கள்

விளையாட்டுத் தொடர்பான செய்திகளை மட்டுமே வெளியிடுவதை இவை கொள்கையாகக் கொண்டிருக்கின்றன. நவராஜ் செல்லையா நடத்தி வரும் 'விளையாட்டுக் களஞ்சியம்' இதழ்கள் குறிப்பிடத் தகுந்தன.

## ஆய்விதழ்கள்

பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை அளிப்பது இவற்றின் நோக்கமாகும். நா.வானமாமலை நடத்திய 'ஆராய்ச்சி' இதழ் இதற்குச் சான்றாகும்.

## துணுக்கு இதழ்கள்

அரசியல், கலை, இலக்கியம், சமயம் முதலான அனைத்துத்துறைச் செய்திகளைக் 'கல்கண்டு' இதழ் மிகச் சுருங்கிய வடிவில் அளிக்கிறது.

## பாலுணர்வு இதழ்கள்

பாலுணர்வைத் தூண்டும் வகையில் கொச்சை மொழியில் படங்களுடன் 'பருவம்', 'செக்ஸ்' முதலான இதழ்கள் வெளியிடுகின்றன.

Scanned by CamScanner

## தகவல் இதழ்கள்

அரசு நிகழ்வுகள், அறிவிப்புகள், ஆணைகள், நடைமுறைகள் முதலிய செய்திகளை வெளியிடும் நோக்கத்தைத் 'தமிழரசு', 'கெஸ்ட்' முதலான இதழ்கள் கொண்டுள்ளன.

## தொழில்துறை இதழ்கள்

'வளர்தொழில்' முதலான இதழ்கள் தொழில்துறை முன்னேற்றம், தொழிலாளர் நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளன. தனித்தொழில் நிறுவனச் செய்திகள் இடம் பெறுகின்றன.

## வணிக இதழ்கள்

இவை வியாபார நோக்கத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் இதழ்களாகும். விறுவிறுப்பான செய்திகள் இவற்றின் முதன்மை பெற்றுக் காணப்படும்.

1. 1930 – கோட்டையூர் – 'தனவணிகன்' – சிறந்த வணிகர் இதழ்
2. வர்த்தகமித்திரன்
3. வர்த்தக ஊழியன்
4. புதிய பொருளாதாரம்
5. பங்கு மார்க்கெட்
6. வணிக வளம்

## சோதிட இதழ்கள்

இவற்றில் சோதிடம் பற்றிய குறிப்புகள், கருத்துரைகள் மட்டுமே இடம் பெற்றிருக்கும். பல்வேறு கிரகங்களின் அமைப்பு இவற்றில் தெளிவாக விளக்கப் பெற்றிருக்கும். இன்றைய இதழ்களில் சோதிடத்திற்கு அதிக இடம் அளிக்கப்படுகிறது. இராசிபலன் இல்லாத இதழே இன்று இல்லை எனலாம்.

1. 1923 – வேலூர் – மாத இதழ் – முதல் ஆருட இதழ்.
2. பொய்யா மொழி
3. பால ஜோதிடம்

## சட்ட இதழ்கள்

1. சித்தாந்த சங்கிரகம் – 1887 – அரசாங்க வழக்கறிஞர் கரூர் இராமன் – தமிழில் முதல் சட்ட இதழ்
2. மாதாந்திர சட்டப் பத்திரிகை
3. வக்கீல் குமாஸ்தா ஜர்னல்
4. வக்கீல்
5. நீதி
6. கோர்ட்டுத் தீர்மானங்கள்
7. தீர்ப்புத் திரட்டு – மாத இதழ் – சென்னை உயர்நீதிமன்றம் வெளியிடல்

Scanned by CamScanner

## திரைப்பட இதழ்கள்

1. சினிமா உலகம் – முதல் திரைப்பட இதழ்
2. சந்திரோதயம்
3. சில்வர் ஸ்கிரீன்
4. ஆடல் பாடல்
5. பிலிம் மெயில்
6. மூவி ரொல்டு
7. நாடக உலகம் – நடிகர் யதார்த்தம் பொன்னுசாமி – (நாடகக்கலை இதழ்)
8. சினிமா எக்ஸ்பிரஸ்

## உளவியல் இதழ்கள்

ஒரு மனிதனின் உளவியல் நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் சாதனங்களாக அமைவன உளவியல் இதழ்களாகும். மன நோயாளியின் குறைகள், அவற்றை நீக்கும் முறைகள் பற்றி செய்திகள் 'மனநலம்' 'உள்ளம்' முதலான இதழ்களில் ஆராயப் பெற்றிருக்கும்.

## கவிதை இதழ்கள்

செய்திகள் அனைத்தும் கவிதை வடிவில் இடம் பெறுகின்றன.

1. கவிஞர் சுரதா – 'காவியம்' – கவிதை இதழ்
2. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் – குயில்
3. தெசினியின் – 'கவிதை'
4. மா.செங்குட்டுவன் – 'கவிக்கொண்டல்'
5. 'சங்கொலி' கிருஷ்ணமூர்த்தி – 'கவிக்கோலம்'

## அரசியல் இதழ்கள்

தமது கட்சிச் செய்திகள், விளம்பரங்கள், தலைவர்களது அறிக்கைகள், நிகழ்ச்சிகள் முதலான விவரங்களை இவ்விதழ்கள் வெளியிடும். மாற்றுக் கட்சியினரின் கருத்துகளுக்கு மறுப்புரை, விளக்கவுரை முதலானவையும் இடம் பெறும். இவ்வகையான இதழ்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டாலும் அரசியலுக்கே முதலிடம் கொடுக்கும்.

'முரசொலி', 'நம் நாடு', 'ஜனசக்தி', 'பொன்மனம்', 'சமநீதி' முதலானவை அரசியல் இதழ்களாகும்.

Scanned by CamScanner

## இதழியல் மொழிநடை

ஓர் இதழுக்குச் சிறப்புச் சேர்ப்பவற்றுள் ஒன்று அதனுடைய மொழி நடையாகும். மொழி, கருத்துகளை வெளிப்படுத்தும் கருவியாகும். அதனை நாம் எப்பொழுதும் ஒன்றுபோல் பயன்படுத்துவதில்லை. பேச்சு நடை வேறு; எழுத்து நடை வேறு; கூறுகின்ற பொருளுக்கேற்ப எழுதுகின்ற மொழிநடை மாறும். பண்டைய எழுத்தாளர்கள் நடை கடினமாக இருக்கும். இன்றைய எழுத்தாளர் களின் நடை எளிமை உடையது. சிறுகதைகளில் சொல் சிக்கனத்தைக் காணலாம். நாவல்களில் நீண்ட வருணனைகளும் அணிசேர்க்கும் அடை மொழிகளும் உவமைகளும் மிகுந்திருக்கும்.

இதழியல் மொழிநடை இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஓரளவு படிக்கத் தெரிந்தவர்களும் எளிதில் படித்துப் புரிந்துக் கொள்ளக்கூடிய மக்கள் மொழிநடையில் இதழியல் எழுத்துகள் இருக்க வேண்டும். அகராதியின் துணை கொண்டு புரிந்து கொள்ளும் மொழிநடை இருந்தால், பொது மக்கள் அந்தச் செய்தித்தாளை வாங்கிப் படிக்க மாட்டார்கள்.

### சி.பா.ஆதித்தனார் கருத்து

"பேச்சு வழக்கில் இருக்கும் தமிழே உயிருள்ள தமிழ். அதை கொச்சை நீக்கி எழுத வேண்டும்; புரிகிற தமிழில் எழுதினால் மட்டும் போதாது; பேசுகிற தமிழில் எழுத வேண்டும்" என்று கூறுகின்றார்.

### பத்திரிகை எழுத்தாளர் கையேடு

தமிழில் மொழிநடை நூலை உருவாக்கிப் பெருமை பெற்றவர் சி.பா.ஆதித்தனார். அவர் பத்திரிகைத் துறையில் முப்பத்தைந்து ஆண்டுகள் பெற்ற அனுபவத்தின் விளைவாக, தனது நாளிதழ்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு எழுதி அனுப்பிய குறிப்புகளின் தொகுப்பாக அமைந்த நூல் 'பத்திரிகை எழுத்தாளர் கையேடு' தமிழில் வெளிவந்த முதல் இதழியல் மொழிநடை நூல் இதுதான். இந்நூலில் நாற்பத்து நான்கு அத்தியாயங்கள் உள்ளன. சுருக்கமாக, தெளிவாக, தக்க எடுத்துக்காட்டுகளுடன் இந்நூல் சிறப்பாக அமைந்துள்ளது.

### ரெங்கசாமி பார்த்தசாரதி

"எந்த ஒரு மொழிநடை நூலும் தொழில் முறைச் செய்தியாளர், துணையாசிரியர் ஆகியோரின் முத்திரைகளாக விளங்குகின்ற கடின உழைப்பு, பெற்றிருக்கும் ஆற்றல்கள், இயல்பான கலைத்திறன் ஆகியவற்றிற்கு இணையாக முடியாது"

### எம். செல்லையா

பிழையின்றி எழுத வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட எம்.செல்லையா, ஒரு தமிழ் நாளிதழ் செய்தியைச் சுட்டிக் காட்டி, "தலைப்பிலும் செய்தியிலும் **'அக்கரை'** என இடையின 'ர' எழுதப்பட்டிருக்கிறது. இத்தவறுக்குக் காரணம்,

Scanned by CamScanner

இதை எழுதியவருக்கு விஷயத்தில் போதிய அக்கறை இல்லை என்பதுதான்" என்று வேடிக்கையாகக் கூறுகின்றனர். (எம்.செல்லையா, 'செய்திகள்', பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி 1978, ப.27).

### தமிழ் இதழியல் நடை வளர்ச்சி

தமிழ் இதழ்களின் மொழிநடைக்கும் ஆங்கில இதழ்களின் மொழி நடைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. செய்தித்தாள்களை நடத்துவதில் இங்கிலாந்து நாட்டு மரபுகளைப் பின்பற்றினார்கள். மேலும் அவற்றின் வாசகர்களும் ஆங்கில அறிவு பெற்றவர்களாக இருந்தனர். ஆகவே ஆங்கில இதழ்களின் மொழிநடை உயர்வானதாக அமைந்தது.

1890இல் இங்கிலாந்து நாட்டு ஆல்பர்ட் ஹக்ம்ஸ்வொர்த், அமெரிக்க நாட்டு வில்லியம் ராண்டல்ப் இருவரும் இதழ்களுக்கு எளிய நிலையான மொழி நடையையும் செய்திகளை வெளியிடும் முறையையும் புகுத்தியுள்ளனர். அவற்றினை எல்லா ஆங்கில இதழ்களும் ஏற்றுச் செயல்படுவதால் ஆங்கில இதழ்கள் ஒரே சீராக வருகிறது.

தமிழ் இதழ்களைத் தொடங்கியவர்கள் அரசியல் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். தமிழறிவு குறைந்தவர்கள். அதனால் மொழி உணர்வு இன்றியே இதழ்களை நடத்தினர்.

ஆங்கிலமும் வடமொழியும் கலந்த ஒருவகைக் கலப்பு மொழிநடையே தமிழ் இதழியல் நடையாக இருந்தது. தமிழ் நாளிதழ்களில் மலிந்து கிடந்த பிழைகளைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க.

*"தமிழைப்போல் உயர்ந்த மொழி*
*தரணியெங்கும் கண்டதில்லை;*
*தமிழரைப்போல் மொழிக் கொலையில்*
*தலைசிறந்தோர் எவருளரே"*

என்று பாடியுள்ளார்.

### சோமலெ கருத்துரை

தமிழ் இதழ்களின் நடையில் தனிப்பெறும் மாற்றத்தை ஏற்படுத்தியவர் திரு.வி.க. இதனை, சோமலெ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"உணர்ச்சி, விறுவிறுப்பு, வேகம், நடையின் போக்கு இவற்றாலும் தீப்பொறி பறக்கும் எழுத்துகளாலும் 'நவசக்தி', 'தேசபக்தன்' என்னும் இதழ்கள் வாயிலாக உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி அரிய முறையில் அரசியல் இயக்கத்திற்குத் திரு.வி.க.பணியாற்றினார். "இந்த ரிவொலுயூசனை சக்சஸ்புல் ஆக்க வேண்டும்" என்பது போன்ற தமிழைப் பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருந்தபோது, உரிய சொற்களைத் தமிழாக்கி வெளியிட்டவர் திரு.வி.க. இவ்வாறு பத்திரிகைகள் வாயிலாக இவர் ஆற்றிய தமிழ்ப்பணி போற்றுதற்குரியது. ஈடு இணை இல்லாதது; கருத்துகளைத் தொகுத்து ஒரு கவர்ச்சியான தலைப்பிட்டு, அவற்றை வகை செய்து பல உட்பிரிவுகள் ஏற்படுத்தி, ஒவ்வோர்

Scanned by CamScanner

உட்பிரிவையும் சொற்றொடர்கள்; அலசி விளக்கும் பாங்கு; அருந்தமிழ்ச் சொற்கள், இவற்றையும் திரு.வி.க. நடத்திய இதழ்களில் காணலாம்'' என்கிறார். (சோமலெ, `தமிழ் இதழ்கள்`, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 1975, ப.xxii).

## இதழியலுக்கு உரமளித்தவர்கள்

1. மகாகவி பாரதியார் – `சுதேசமித்திரன்`, `இந்தியா` இதழ்கள்.
2. டாக்டர் வரதராஜுலு நாயுடு – `தமிழ்நாடு` இதழ்
3. சங்கு கணேசன், கல்கி

   டி.எஸ்.சொக்கலிங்கம் – இதழியல் மொழிநடை
4. மதுரை – திரு.கரு.முத்து

   தியாகராசன் செட்டியார் – `தமிழ்நாடு` இதழ் (தமிழ் இதழ்கள்)
5. அறிஞர் அண்ணா – `திராவிடநாடு`, `காஞ்சி`, `ஹோம்லேண்டு`, `ஹோம்ரூல்` இதழ்கள் (ஆங்கில இதழ்கள்)
6. சி.பா.ஆதித்தனார் – `தினத்தந்தி`

## பிழையற்ற மொழிநடை

செய்தித்தாள் நடை இலக்கிய நடையாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் இலக்கணப் பிழைகள் மலிந்ததாக இருக்கக் கூடாது. எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் தவிர்க்க வேண்டும். காற்புள்ளி, அரைப்புள்ளி, புள்ளிபோன்ற நிறுத்தக் குறிகளைச் சரியான இடத்தில் போடுவது மொழித் தெளிவுக்கு உதவும்.

## தலையங்கம்

நாளேடு, வார, மாத, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழ்களில் தலையங்கம் முதலிடம் பெறுகின்றது. அனைத்து ஆங்கில இதழ்களிலும் தலையங்கத்தைக் காணலாம். தமிழில் சில இதழ்களில் தலையங்கம் வெளியிடப்படுவதில்லை. ஆனால் 'தினமணி' போன்ற சிலவற்றில் நாள்தோறும் தவறாமல், தலையங்கம் வெளியிடப்படுகின்றது.

தலையங்கம், இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கத்தின் சமுதாயப் பயனை நினைத்துப் பார்த்தால் அதன் முக்கியத்துவம் விளங்கும்.

## ஜான் ஹோஹன்பர்க் (John Hohen berg)

“செய்தித்தாளில் மிகவும் புறக்கணிக்கப் பெறுகின்ற, குறைவாக மதிப்பிடப் பெறுகின்ற பகுதி தலையங்கமாகும். ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட அமெரிக்க நாளிதழ்கள் தலையங்கம் வெளியிடுவதில்லை. இருந்தாலும் பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் இதழியலின் ஒரு தலையாய கருவியாக இது இருக்கின்றது” என்கிறார்.

Scanned by CamScanner

**எம்.வி.காமத்**

"தலையங்கத்தைச் செய்தித்தாளின் கருத்துக் கண்ணாடி; மிகப் பெரிய அழிவற்ற ஆன்மா; மனச்சான்று. ஒரு நல்ல தலையங்கம் செயலைத் தூண்டுகிறது; பணிகளை முடுக்குகின்றது; சட்டத்தைத் திருத்துகின்றது" புரட்சியைத் தோற்றுவிக்கின்றது என்கிறார்.

**டி.எஸ்.மேத்தா**

"ஒரு குறிப்பிட்ட கொள்கை, திட்டம், நிகழ்ச்சி பற்றிய இதழின் கண்ணோட்டத்தைத் தலையங்கம் வெளிப்படுத்துகின்றது. அது ஒரு குறிப்பிட்ட கருத்தை அல்லது கொள்கையைத் தூண்டவோ, விளக்கவோ, கவர்ந்திழுக்கவோ, குறைகூறவோ, மறுக்கவோ செய்யும். கருத்தைக் கூறுவதன்மூலம் பொது மக்களின் கருத்தை உருவாக்க முயல்கின்றது. வாசகர்களைத் தனது கருத்துக்கு மாற்றவும் தலையங்கம் பயன்படலாம்" என்று கூறுகின்றார்.

உத்தமர் காந்தியடிகள், மகாகவி பாரதியார், திரு.வி.க. போன்றவர்கள் எழுதிய தலையங்கங்கள் பொது மக்களின் கருத்துகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்றின. ஒரு குறிப்பிட்ட கருத்தை மக்களிடம் உருவாக்கத் தலையங்கம் துணை செய்கின்றது. சான்றாக, மதுவின் கொடுமைகளை விளக்கியும் மதுவிலக்கின் தேவையையும் வலியுறுத்தித் தலையங்கங்கள் வெளிவந்தால் பொதுமக்களின் கருத்தை அந்த நோக்கில் உருவாக்க இயலும்.

செய்திகளை வெளியிடுகின்றபொழுது கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல் அப்படியே வெளியிட வேண்டும். இது இதழ்கள் பின்பற்ற வேண்டிய அறநெறியாகும். இதன்படி செய்திகளை அப்படியே வெளியிட்டு விட்டு, முக்கியமான செய்தியைப் பொதுமக்களின் நன்மை கருதித் தலையங்கமாக விளக்கிக் காட்டலாம். சான்றாக, அரசின் வரவு – செலவு திட்டம். தலையங்கத்தில் குறிப்பிட்ட சில வரிகள் எப்படி மக்களுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கின்றன என்பதை விளக்கிக் கூறலாம்.

நமது நாட்டில் விடுதலை இயக்கம் நடைபெற்றபொழுது பெரும்பாலும் மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் பணியைத் தலையங்கங்கள் செய்கின்றன. பொதுமக்களின் கருத்துக்கு வடிவம் தந்து வெளிக்காட்டும் பணியையும் தலையங்கம் புரியலாம். வாசகர்களுக்குச் சிலவற்றைக் கற்றுத் தருகின்ற கருவியாகவும் தலையங்கம் அமையலாம். 'தினமணி' நாளிதழில் இத்தகையத் தலையங்கங்களைக் காணலாம்.

சமுதாயத்தில் சாதிச் சண்டைகள் அல்லது சமயச் சண்டைகள் நடைபெறும் பொழுது அவற்றைக் கண்டித்தும், ஒற்றுமையையும் அமைதியையும் வலியுறுத்தித் தலையங்கம் அமைக்கலாம். மக்களின் நலனைக் காக்கவும் நாட்டின் ஒற்றுமையைப் பேணவும் தலையங்கம் தீட்டப்படலாம். நல்ல இதழாசிரியர் காலத்தின் தேவையை உணர்ந்து தலையங்கம் எழுதுவார்.

Scanned by CamScanner

## தலையங்கம் எழுதுவோர்

ஒரு காலத்தில் ஓரிதழின் தலையங்கத்தை அதன் ஆசிரியர் எழுதுவது தான் மரபாக இருந்து வந்தது. தற்போது சூழ்நிலை மாறி உள்ளது. மிகப் பெரிய நாளிதழ்களில் தலையங்கம் எழுதுவதற்கென்றே தனிக் குழுவை வைத்திருக்கின்றனர். ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள் கொண்ட இக்குழுவில் உள்ளவர்கள் தலைப்பை ஒட்டி, யார் எழுதுவது எனத் தீர்மானித்து எழுதுவார்கள்.

யார் தலையங்கம் எழுதினாலும் தலையங்கம் எழுதுபவரின் பொறுப்பு மிகுதி என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எதனைப் பற்றித் தலையங்கம் எழுதினாலும் அதனைப் பற்றிய எல்லா விவரங்களையும் முழுமையாக அறிந்து கொண்டு, காய்தல், உவத்தல் இல்லாமல் தலையங்கம் எழுத வேண்டும்.

## சிறந்த தலையங்கத்தின் இயல்புகள்

1. சிறந்த தலையங்கம், குழப்பமில்லாமல், தெளிவான நடையில் வலுவான கருத்தகளோடு அமைதல் வேண்டும்.
2. கருத்துகளை முறைப்படுத்திச் சுவையாகவும் சுருக்கமாகவும் தலையங்கத்தை அமைக்க வேண்டும்.
3. ஒரு கட்டுரை போன்று நீண்டதாக இருக்கக் கூடாது.
4. சுற்றி வளைத்து எழுதாமல், நேரடியாகவோ சிக்கல்களைக் கூறி, விளக்கி, இறுதியில் முடிவையும் தெரிவிக்க வேண்டும்.
5. படிப்பவர்களுக்கு அலுப்பை ஏற்படுத்தக் கூடாது.

## தலையங்கம் - விதிமுறைகள்

அமெரிக்காவில் தலையங்கம் எழுதுவோரின் தேசிய மாநாட்டில் தலையங்கம் எழுதுவோர் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளைத் தொகுத்தளித்தனர். அவற்றினை இனிக் காண்போம் :

1. தலையங்கம் எழுதுவோர் விவரங்களை நேர்மையாகவும் முழுமையாகவும் கூறவேண்டும்.
2. தன்னலநோக்கோடு தலையங்கம் எழுதக் கூடாது.
3. அவர் தம்மிடம் இருக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் கூறுகின்ற விவரங்களை ஆதாரமாகக் கொண்டு, சமுதாய நலனை முன்னிருத்தி, அறிவார்ந்த முடிவுகளை வழங்க வேண்டும்.
4. மாறுபட்ட கருத்துகளைக் கொண்டவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தால், அவற்றை 'வாசகர் கடிதங்களாக' வெளியிடுவது நல்லது'
5. தாம் முதலில் எழுதிய தலையங்கம் தவறான விவரங்கள், கருத்துகள் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதை அறிந்தால், அதனை மாற்றி, திருத்தி எழுதத் தயங்கக் கூடாது.

Scanned by CamScanner

6. தம்முடைய சரியான, ஆதாரமான நம்பிக்கையைக் கூறுவதில் துணிச்சல் இருக்க வேண்டும்.

7. தம்மோடு தொழிலில் ஈடுபட்டவர்கள், உயர்ந்த நிலையில் தொழில் நேர்மையோடு செய்யும் பணிகளுக்கு ஆதரவு தர வேண்டும்.

## தலையங்கத் தேசிய மாநாட்டு கருத்து

"தலையங்கம் எழுதுவோர், ஓர் அறிவியலாளரைப் போல், தமது சமுதாயத்திற்கும் தொழிலுக்கும் நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டு மானால், என்ன விளைவு ஏற்படுமானாலும் அதனைப் பற்றிக் கவலைப்படாமல் உண்மையைப் பின்பற்ற வேண்டும்" என்று தலையங்கத் தேசிய மாநாட்டில் குறித்துள்ளனர்.

செய்தித்தாளின் ஒரு சிறப்பான உறுப்பாகத் தலையங்கம் திகழ்கிறது. சில இதழ்களின் தலையங்கங்களை அரசியல் தலைவர்கள் மேற்கோளாகக் காட்டுவதைக் காணலாம். சில இதழ்களின் தலையங்கங்களை மக்கள் பெரிதும் போற்றிப் புகழ்கின்றனர்.

காந்தியடிகளைச் சிறந்த தலையங்கங்கள் எழுதியவராக இதழியல் வல்லுநர்கள் பாராட்டுகின்றனர். அவர் 'ஹரிஜன்', யங் இந்தியா இதழ்களில் எழுதிய தலையங்கங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர். காலத்திற்கேற்ற தலையங்கங்கள் எழுதுவதில் வல்லவராகக் காந்தியடிகள் விளங்கினார்.

## சிறப்புத் தனிக் கூறுகள்

இதழியலாளர்களிடம் தனிச் செல்வாக்குப் பெற்றிருக்கும் ஆங்கிலச் சொல் (Feature) 'ஃபீச்சர்' என்பதாகும். இதனைத் தமிழில் 'சிறப்புத் தனிக்கூறு' என்றும் 'சிறப்புத் தூக்கி' என்றும் அழைப்பர்.

## சொற்பொருள் விளக்கம்

சிறப்புத் தனிக்கூறு என்பது 'சிறப்புக் கட்டுரை'யை மட்டும் குறிக்கின்ற சொல்லல்ல. அதனைவிட ஆழமானது. 'Feature' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, அகராதியில் பின்வரும் பொருள் உள்ளது.

1. முகத்தின் ஒரு பகுதி
2. மூக்கு, வாய், நெற்றி ஆகிய கூறுகள்
3. தனிப்பாகம் அல்லது தன்மை, தனித்து நிற்கின்ற, கவர்கின்ற பொருள்.
4. நீண்ட திரைப்படம்
5. செய்தித்தாளில் இடம் பெறும் சிறப்புக் கட்டுரை கேலித் துணுக்கு.

## ஜேம்ஸ் எம்.நீலும் சூசானே எஸ்.பிரவுன் கருத்துரை

"மற்றைய செய்திகளிலிருந்து சிறப்புத் தனிக் கூறுகளைப் பிரிக்கும் இயல்புகளாக உடனடிக் காலத் தொடர்பின்மை (Lack of immediately)

சுவையான விறுவிறுப்பான பொருளைப்பற்றி ஆழ்ந்து விவரித்தல் ஆகியவற்றைக் கூறலாம்'' என்கின்றனர்.

## எம்.வி.காமத் கூற்று

''ஓரளவு மட்டும் அறிந்துள்ளதை உடனடித் தொடர்புபோடு விளக்குவதாக இருக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் ஒரு சிறப்புத் தனிக்கூறு வாசகருக்கு அவர் இதுவரை அறிந்திராத புதுத் தகவலைத் தரவேண்டும். ஒரு சிறப்புத் தனிக்கூறு செய்திகளின் பின்புலத்தைத் தர வேண்டும். அதில் பகுத்தாய்வு, விளக்கம், விவாதம் எல்லாம் அடங்குகின்றன'' என்கிறார்.

ஒரு செய்தி, விவரங்களையோ கருத்துகளையோ கூறியதோடு முடிந்து விடுகின்றது. ஆனால் தனிச் சிறப்புக்கூறு மேலும் ஆழ்ந்து செல்கின்றது. அதன் பின்புலத்தை ஆராய்ந்து, அதன் தோற்றம், வளர்ச்சி, வீச்சு ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி, எதிர்காலம் பற்றியும் கோடிட்டு காட்டுகின்றது. பொதுவாக வாசகரின் கற்பனைக்கும் கருத்துக்கும் வளர்ச்சிக்கும் உணவளிப்பதாக அமையும்.

பெரும்பாலான வாசகர்கள் ஆர்வங்காட்டுகின்ற ஒரு பொருள் பற்றியோ, செய்தி பற்றியோ பருவகால நிகழ்ச்சி பற்றியோ உடனடியாக மக்கள் பேசிக் கொள்வது பற்றியோ இருக்கும். வாசகர்களை மகிழ்விக்கவோ, அவர்களுக்குத் தெரிவிக்கவோ, வழிகாட்டவோ, எப்படி ஒன்றைச் செய்ய வேண்டுமென்று கூறுவதற்காகவோ சிறப்புத் தனிக்கூறுக் கட்டுரையை எழுதலாம். செய்திகளில் இல்லாத விளக்கங்களையும் விவரங்களையும் சிறப்புத் தனிக் கூறுகளில் காணலாம்.

இவை சாதாரண செய்திகளைக்கூட மனித ஆர்வமுள்ள கட்டுரைகளாக மாற்றுகின்றன. செய்தியாக ஒன்றைப் படிக்காதவர்கள்கூட, சிறப்புத் தனிக்கூறு கட்டுரையைப் படிப்பர். இது, செய்திக்குப் புதிய கோணத்தில் விளக்கமளிக்கிறது. செய்தியை விட ஆழம், அகலம், வீச்சு ஆகியனவற்றை உடையது தனிச் சிறப்பு கூறாகும்.

## சிறப்புத் தனிக் கூறின் வகைகள்

1. செய்திச் சிறப்புத் தனிக் கூறுகள் (News Features)
2. பெரியோர் வாழ்க்கைச் சிறப்புத்தனிக் கூறுகள் (Personality Feature)
3. மனித ஆர்வம், பயன்பாட்டு சிறப்புத் தனிக்கூறுகள் (Human interest Features)
4. அனுபவச் சிறப்புத்தனிக் கூறுகள் (Experience Features)
5. புலனாய்வுச் சிறப்புத் தனிக்கூறுகள் (Investigation Features)
6. இடங்கள் பற்றிய சிறப்புத் தனிக் கூறுகள்
7. பொழுதுபோக்கு பற்றியன.
8. வளர்ப்பு விலங்குகள் பற்றியன.
9. அறிவியல் சிறப்புத் தனிக்கூறு.

Scanned by CamScanner

10. புகைப்படச் சிறப்புத் தனிக்கூறு.

11. நிறுவன சிறப்புத் தனிக் கூறுகள்.

**தனிச் சிறப்புக் கூறுகளை எழுதத் தேவையானவை**

1. பொருள் தேர்வு
2. விவரங்களைத் திரட்டுதல்
3. வரைபடம்
4. முகப்பு
5. நடையும் விளக்கப்படங்களும்
6. திரும்பப் பார்த்தல்
7. மொத்த அமைப்பு

## திறனாய்வாளர் இயல்புகளும் வகைகளும்

### மதிப்புரைகள் (Reviews)

படைப்பாளனுக்கும் வாசகர்களுக்கும் இடையே நின்று படைப்பின் தரத்தை எடுத்துரைப்பது மதிப்புரை ஆகும். ஒரு படைப்பாளன் எப்பொழுது தன் திறமையை, நேர்மையை சமுதாயம் இணங்கான வேண்டும் என விரும்புகிறானோ அப்பொழுது தன்னையும் தன் படைப்பையும் பொதுமக்களும் பத்திரிகைகளும் விமர்சிப்பதற்கு உடன்படுகிறான். இதன் அடிப்படையில்தான் பத்திரிகைகளில் மதிப்புரை இடம் பெறுகிறது.

ஒரு தனிப்பட்ட மனிதனோ ஒரு நிகழ்ச்சியோ ஒரு நூலோ சமுதாயத்தின் மாற்ற ஏற்றங்கட்குக் காரணமாகும் பொழுது அவனையோ அவற்றையோ பற்றி விமர்சிப்பது தவறாகாது. எவர்க்கும் அப்படி விமர்சிக்க உரிமை உண்டு.

நூல்கள், நாடகங்கள், திரைப்படங்கள், இசைக் கச்சேரிகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றி இதழ்கள் திறனாய்வுகளை (மதிப்புரைகளை) வெளியிடுகின்றன. இவை வாசகர்களுக்கு உதவும் நோக்கிலும் மேற்கூறிய கலைகள் வளர்ச்சி அடையவும் எழுதப்படுகின்றன. வாசகர்களுக்கும் படைப் பாளர்களக்கம் இடையே இதழ்கள் பாலமைத்துத் தருகின்றன. தரமான படைப்புகளை இனங்கண்டு போற்ற திறனாய்வு துணை செய்கின்றது.

### திறனாய்வாளரின் இயல்புகள்

திறனாய்வு என்பது அறங்கூறுவோரின் பணி போன்றது. நடுநிலையில் நின்று சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல, திறனாய்கின்ற கலையின், படைப்பின் நிறை குறைகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தெரிவிக்க வேண்டும்.

### அறநெறிச் சாரம் கருத்து

திறனாய்வாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதை, ‘அறநெறிச் சாரம்’ பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

Scanned by CamScanner

"காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்களை
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்
உற்ற குணந் தோன்றாதாகும் உவப்பதன் கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்".

## திருவள்ளுவர் கருத்துரைகள்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறும் பின்வரும் கருத்துகள் திறனாய்வாளருக்குப் பெரிதும் பொருந்துவனவாகும்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"
"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

## எம்.வி.காமத் கூற்று

"ஒரு திறனாய்வாளர் அவரது தொழிலில் ஓர் ஆபரணம் போலத் திகழ வேண்டும். குறை கூறுதல் நன்மை பயக்குமெனில் குறை கூற வேண்டும். ஆதரவும் ஊக்கமும் தரவேண்டிய இடத்தில் தரவேண்டும். நல்ல சுவையின் காவல் நாயகனாகத் திறனாய்வாளர் இருத்தல் வேண்டும்" என்கிறார்.

1. நடுநிலையில் நின்று இப்பணியைச் செய்ய வேண்டும்.
2. விருப்புவெறுப்பின்றி எதனையும் ஆராய்ந்து கூற வேண்டும்.
4. அறைகுறை அறிவோடு திறனாய்வு செய்கின்றவர்களால் பயன்களைவிடக் கேடுகளே மிகுதியாக விளையும்.

## திறனாய்வு வகைகள்

1. நூல் திறனாய்வு (Book Review)
2. திரைப்படத் திறனாய்வு
3. இசைத் திறனாய்வு
4. நாடகத் திறனாய்வு

## 1. நூல் திறனாய்வு

பெரும்பாலான இதழ்கள் நூல் திறனாய்வுப் பகுதியினை வெளியிடுகின்றன. சில இதழ்கள் நூல்களின் பெயர், ஆசிரியர், கிடைக்குமிடம், விலை ஆகியவற்றை மட்டுமே வெளியிடுகின்றன. சில இதழ்கள் 'வந்த நூல்கள்' (Book Received) பட்டியல் தந்து விட்டு, மதிப்புடைய சிலவற்றிற்கு மட்டுமே மதிப்புரை வெளியிடுகின்றன.

1. குமுதம் – வார இதழ் – 'பு(து)த்தகம்' – நூல் மதிப்புரை
2. செந்தமிழ்ச்செல்வி – மாத இதழ் – நூல் திறனாய்வுப் பணி
3. தினமணி – நாளிதழ் – நூல் திறனாய்வுப் பணி
4. 'சர்வோதயம்' இதழ் – தரமான நூல்களுக்கு மதிப்புரை.

Scanned by CamScanner

### கவனிக்க வேண்டியவை

1. நூல் திறனாய்வாளர் நூல் முழுவதையும் முழுமையாகப் படித்துத் திறனாய்வு செய்தல் வேண்டும்.
2. ஒரு நூல் எந்தப் துறையைச் சார்ந்ததோ, அந்தத்துறை பற்றிய அடிப்படை அறிவு இருந்தால் மட்டுந்தான் ஒரு நூலினைத் திறனாய்வு செய்ய வேண்டும்.
3. நடுநிலை நின்று, விருப்பு வெறுப்பின்றி, குறை நிறை இரண்டையும் கூற வேண்டும்.

### மதிப்புரை அமைய வேண்டிய முறை

1. நூலின் விவரப்பகுதி
2. நூலின் உள்ளடக்கம்
3. திறனாய்வுப் பகுதி

நூலின் முக்கியத்துவத்தை ஒட்டி சிறியதாகவோ பெரியதாகவோ அமையலாம்.

## 2. திரைப்படத் திறனாய்வு

தற்பொழுது அனைத்து நாளிதழ்களில் வார, மாத இதழ்களில் திரைப்படங்களைத் திறனாய்வதைக் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். நூல்களைத் திறனாய்வு செய்யாத இதழ்கள்கூட திரைப்படத் திறனாய்வுகளை வெளியிடத் தவறுவதில்லை. ஏனெனில் இதழ்களின் விற்பனை உயர்ந்து செல்கின்றது.

தயாரிப்பாளர்கள் தங்கள் படங்களை பத்திரிகையாளர்களுக்கு முன்கூட்டியே தனியே திரையிட்டு (Pre-view show) திறனாய்வு எழுதத் தூண்டுகின்றனர். திறனாய்வை இதழ்கள் செய்வதால் திரைப்பட விளம்பரங்களும் கிடைக்கின்றன. எனவே திரைப்பட மதிப்புரை இன்று அனைத்து இதழ்களிலும் வெளியிடப் படுகின்றது.

### கவனிக்க வேண்டிய முறைகள்

1. திரைப்படத்துறை பற்றிய ஆழ்ந்த அறிவு தேவை.
2. வரலாற்றுப் பின்புலத்தில் திரைப்படங்களை ஒப்பு நோக்கி எழுத வேண்டும்.
3. தயாரிப்பாளர்களின் விருப்பங்களை எந்த நிலையிலும் மதிப்புரையில் வெளியிடக்கூடாது.
4. திரைப்படத்தின் பல்வேறு கூறுகளைப் பற்றியும் எழுத வேண்டும். கதை, பாடல், இசை, ஒளி, ஒலி அமைப்பு, இயக்கம் போன்றவற்றைக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும்.

Scanned by CamScanner

5. படத்தின் வெற்றி தோல்விகளுக்கு யார் யார் பொறுப்பு என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும்.
6. படத்திலுள்ள நிறைகளைப் பாராட்டிக் குறைகளைச் சுட்டிக் காட்டத் தயங்கக் கூடாது.

## 3. இசைத் திறனாய்வு

சென்னை போன்ற பெருநகரங்களில் டிசம்பர் மாதத்தில் நிறைய இசை விழாக்கள் நடத்தப்படுகின்றன. இவற்றைப் பற்றிய திறனாய்வுகளை சென்னை இதழ்கள் வெளியிடுகின்றன.

கலைஞர்களின் வளர்ச்சிக்குப் போற்றுதலும் புகழ்சியும் ஆக்கம் தரக் கூடியவை. 'டானிக்' போன்றவை. மேன்மேலும் கலைகளும் கலைஞர்களும் வளர நல்ல ஆக்கப்பூர்வமான மதிப்பீடுகள் தேவை. ஊக்கமும் ஆக்கமும் தருமாறு மதிப்புரைகள் அமைதல் நலம்.

இசை நுட்பம் தெரிந்தவர்களே திறனாய்வு செய்ய வேண்டும். இசை பற்றிய தங்களது பேரறிவை வெளிப்படுத்திக் கொண்டிராமல் இசைக் கச்சேரியை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இசை நிகழ்ச்சியைப் பற்றித் திறனாய்வு செய்யும்பொழுது பாடகரின் திறமைகளைக் குறிப்பிடுவதோடு பக்க வாத்தியக் காரர்களின் பங்கையும் திறமைகளையும் குறிப்பிட வேண்டும். சிறப்புத் திறன் உடையவரைத் தனித்துக் குறிப்பிட்டுப் பாராட்டலாம்.

நல்ல இசைத் திறனாய்வுகள் மக்களிடம் இசை ஆர்வத்தையும் இசை அறிவையும் வளர்க்கின்றன. இதழ்கள் இசை நிகழ்ச்சிகளோடு நடன நிகழ்ச்சி, நாடக நிகழ்ச்சி, ஓவியக் கண்காட்சி போன்றவற்றையும் திறனாய்வு செய்கின்றன.

## 4. நாடகத் திறனாய்வு

நாடகங்களுக்கு சமுதாயத்தில் தனி இடம் இருப்பதனை மறக்கக் கூடாது. நாடகத் திறனாய்வு செய்பவர்கள், நாடகங்கள் எப்படி திரைப்படங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டவை என்பதை உணர்ந்து திறனாய்வு எழுத வேண்டும்.

1. நாடகத் திறனாய்வாளர், திறனாய்வு செய்யும் நாடகத்தின் பல்வேறு கூறுகளையும் தனித்தனியாக திறனாய்வு செய்ய வேண்டும்.
2. நாடகங்கள் இப்பொழுது இருவகைகளாக அமைகின்றன. ஒன்று தொழில் முறை (Professional) (உ.ம்) கலைஞர்கள் நடிக்கும் நாடகங்கள், மற்றொன்று பயில்முறை (Amateur) கலைஞர்கள் பங்கேற்கும் நாடகங்கள், திறனாய்வில் இவை இரண்டிற்குமுள்ள அடிப்படை வேறுபாடுகளை உணர்ந்து திறனாய்வு செய்ய வேண்டும்.
3. நாடகக் கதையின் இயல்பினைக் கூறலாம்; முக்கியமான திருப்பு முனைகளையும் முடிவையும் கூறக் கூடாது.

Scanned by CamScanner

4. நாடகம் சமூகஞ் சார்ந்ததா? வரலாற்றுத் தொடர்புடையதா என்பதைக் குறிக்க வேண்டும்.
5. மேற்கோள்களின்மூலம் நாடகத்தின் தரத்தை வெளிக் காட்டலாம்.
6. கதை நடைபெறும் இடச் சூழலை விளக்கலாம்.
7. ஆசிரியர் எப்படி கதையைக் கையாண்டிருக்கிறார் என்பதையும் கூறலாம்.
8. மதிப்புரை, நாடகம் பற்றி முழுமையாக இருத்தல் வேண்டும்.
9. மதிப்புரை எளிமையாக, எல்லோரும் புரிந்து கொள்ளும்படி இருக்க வேண்டும்.
10. தலைமைக் கதை மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ள முறையைக் கூறலாம்.

## எழுத்தாளராக விரும்புவோர் கவனிக்க வேண்டியவை

தற்பொழுது இதழியல் துறை வேகமான வளர்ச்சியை அடைந்துள்ளது. பலருக்கு இதழ்களில் எழுதிப் பணமும் புகழும் பெற வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. ஆனால் மிகுந்த ஈடுபாடும் விடாமுயற்சியும் பயிற்சியும் உடையவர்களே சிறந்த எழுத்தாளராகத் திகழ முடியும்.

## இருவகை எழுத்தாளர்கள்

1. எழுத்தையே தொழிலாகக் கொண்ட முழுநேர எழுத்தாளர்கள்.
2. மற்றொரு வகையினர் பகுதி நேர எழுத்தாளர்கள் அல்லது சுதந்திர (Free Lance) எழுத்தாளர்கள்.

தொழில் எழுத்தாளர்கள் ஏதாவது ஓர் இதழில் மாத ஊதியத்திற்காகப் பணியாற்றுகிறவர்கள் தாம். இதழாசிரியராகப் பணியாற்றபவர்கள், உரிமையாளர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப எழுத வேண்டும். இவர்கள் எழுதுவது எல்லாம் இதழ்களில் வெளிவந்தாலும் சில நேரங்களில் இவர்களது பெயர்கள் வராது.

சுதந்திர எழுத்தாளர் எந்த ஓர் இதழிற்கும் கட்டுப்படாதவர். எல்லா இதழ்களுக்கும் எழுதுவார். தன் கருத்திற்கு ஏற்பவும் எழுதுவார். இதழ்களின் கொள்கைகளுக்கு ஏற்பவும் எழுதுவார். இவர் எந்தப் பொருளைப் பற்றியும் எழுதுவதால் இவருக்குப் பணமும் புகழும் வருகின்றன.

(உ.ம்) சுஜாதா, ஜெயகாந்தன், சு.சமுத்திரம், பாலகுமாரன், சிவசங்கரி, ராஜேஷ்குமார், இராஜேந்திரகுமார், வல்லிக்கண்ணன்.

## கவனிக்க வேண்டியவை

1. வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து எழுதுகின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

2. தொடக்க காலத்தில் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டு எழுதுவதைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பரிசு கிடைத்தால் அவர்களே எழுதத்தூண்டுவார்கள். பரிசு கிடைக்க வில்லை எனில் துவண்டுவிடாமல் தொடர்ந்து எழுத வேண்டும்.
3. "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதனை நினைவில் கொள்க.
4. இலக்கியத்தில் பயிற்சி பெற வேண்டும். பழைய நூல்களைப் படிக்க வேண்டும்.
5. எழுத்தில் தனித்தன்மை வர எழுதி எழுதிப் பழக வேண்டும்.
6. ஓர் இதழிலிருந்து ஏதாவது கேட்டால் காலந்தவறாமல் எழுதித் தர வேண்டும்.
7. பார்க்கிற, கேட்கிற, படிக்கிற செய்திகளில் முக்கியமானவற்றைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
8. எழுதுவதற்கு முன் எல்லா விவரங்களையும் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். என்ன வடிவில், எந்த முறையில் அவற்றை வெளியிடுவது எனத் திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
9. கதை, கட்டுரை, கவிதைகளை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.
10. இதழ்களின் தேவைக்கு ஏற்ப எழுதத் தெரிந்திருக்க வேண்டும்.

எழுத்துத் துறையில் வெற்றி பெறுவது என்பது எளிதான செயலன்று. தொடர்ந்து ஊக்கத்தோடு முயன்றால் படிப்படியாக முன்னேறி வெற்றி பெறலாம்.

## தற்கால தமிழ் இதழ்களின் எழுச்சியும் விழ்ச்சியும்

நாடு விடுதலை பெற்ற பிறகு செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் தமிழில் பெருகியுள்ளன. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வியக்கத்தகு மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. ஆனால் குறிக்கோளில் அடிப்படை வேறுபாடு இருப்பதைக் காண முடிகின்றது.

(உ.ம்)

| | | |
|---|---|---|
| நாளிதழ்கள் | – | தினமணி, சுதேசமித்திரன், தினத்தந்தி |
| வார இதழ்கள் | – | கல்கி, ஆனந்தவிகடன், தினமணிக்கதிர் |
| மாத இதழ்கள் | – | கலைமகள், அமுதசுரபி. |

. நாட்டு விடுதலைக்கு முன்னும் போராட்ட காலத்திலும் தோன்றிய இதழ்கள் குறிக்கோளுடன் செயல்பட்டன. நாட்டு விடுதலையும் மக்கள் விழிப்புணர்வுமே முக்கியமாக இருந்தன. ஆனால் இன்றைய இதழ்கள் பொதுவாக வணிக நோக்கில் வெளிவருகின்றன. விற்பனையைக் கூட்டி, ஆதாயத்தைப் பெருக்க அனைத்து வழிமுறைகளையும் கையாள்கின்றன.

Scanned by CamScanner

விடுதலைக்கு முந்தைய இதழ்கள் ஆசிரியர்களின் பெயரையும் ஆற்றலையும் நம்பியே நடைபெற்றன. (உ.ம்) திரு.வி.க., கல்கி, அறிஞர் அண்ணா. இன்றைய செய்தித்தாள்கள், வார இதழ்கள் திரைப்படச் செய்திகளையே நம்பி நடத்தப்படுகின்றன.

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இதழ்களை நடத்தியவர்கள் ஆங்கிலேய அரசின் பல்வேறு அடக்கு முறைகளுக்கு ஆளாகினர். ஆனால் இன்றைய இதழ்களுக்குச் சுதந்திரமும் ஓரளவு அரசின் ஆதரவும் உள்ளன.

## தற்கால இதழ்களின் சிறப்பியல்புகள் (எழுச்சிப் போக்குகள்)

1. இதழ்களின் அமைப்புமுறை, அச்சிடுதல், வண்ணங்கள் போன்றவற்றில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.
2. மேலை நாட்டு இதழியல் முறையைப் பின்பற்றிப் புலனாய்வு இதழ்கள் செல்வாக்குப் பெற்று வருகின்றன.
3. படிக்கின்ற பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றன.
4. சில இதழ்கள் இலக்கிய ஆர்வத்தையும் சமுதாய விழிப்புணர்வையும் ஊட்டி வருகின்றன.
5. இன்றுள்ள நடைமுறைக்குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் போக்கு வளர்ந்து வருகின்றது.
6. தற்கால அவசர நெருக்கடி சூழலுக்கு ஏற்ப மக்களுக்குப் பயனுள்ள கருத்துகளைத் திரட்டி, மாத்திரைகள் போல வழங்கச் சில இதழ்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டத்தக்கன.

## குறைகள் (வீழ்ச்சிப் போக்குகள்)

1. வாணிப நோக்கோடு செயல்படும் இதழ்கள் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் படங்களையும் கதைகளையும் துணுக்குகளையும் வெளியிடுகின்றன. வாசகர்களைக் கவர்ந்து இழுப்பதற்காக இவை எந்தத் தாழ்நிலைக்கும் செல்கின்றன.
2. ‘பாலுணர்வை’ இன்று இதழ்கள் மலிவுப் பொருளாக்கி விட்டன. விளைவு, பல இதழ்களை ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து பார்க்கவோ படிக்கவோ இயலாது.
3. பல இதழ்களில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், மக்களின் மனவளத்தை வளர்ப்பனவாகவோ சமுதாயப் பண்பாடு, நாட்டு ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை வளர்ப்பனவாகவோ இல்லை.
4. இன்றைய இதழ்கள் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிவிட்டன.
5. மக்களாட்சிக்கு இன்றியமையாத குடிமைப் பண்புகளையும் தலைமைத் தகுதிகளையும் உருவாக்கவும் வாய்ப்புகளைப் பெற்ற இதழ்கள், அவற்றைச் செய்யத் தவறி விட்டன.

Scanned by CamScanner

PAGE No.
DATE : / /

அலகு - 5

1. நாளிதழ்கள், பருவ இதழ்கள் குறித்து எழுதுக.
2. கையெழுத்துப் பத்திரிகைகள் பற்றி எழுதுக.
3. இதழ்களில் இடம்பெறும் இராயலிட, ஆசிரியருக்குக் கடிதங்கள் பற்றி எழுதுக.
4. இதழ்களில் துணுக்குகளின் பங்களிப்பை பற்றி எழுதுக.
5. இலச்சினை என்றால் என்ன? இதழ்களில் அதன் பங்கு யாது?
6. விளம்பரம் - விளக்கம் தருக.
7. விளம்பரத்தின் நோக்கங்கள் குறித்து எழுதுக.
8. பத்திரிகைகளில் அமைந்துள்ள சில விளம்பர வகைகளை எழுதுக.
9. நச்சு இதழ்கள் குறித்து விளக்குக.
10. இதழ்களின் எழுச்சியும், வீழ்ச்சியும் பற்றி குறிப்பிடுக.
11. இதழ்களின் பகுப்பும் அமைப்பும் குறித்து கட்டுரைக்க.
12. இதழ்களில் இடம்பெறுவன குறித்து விளக்குக.
13. புலனாய்வு இதழ்கள், நச்சு இதழ்கள் குறித்து எழுதுக.
14. செய்திகளில் விளம்பரத்தின் நோக்கங்களை விவரிக்க.
15. விளம்பர வகைகள் குறித்து கட்டுரை வரைக.
16. இதழ்களில் விளம்பரம் பெறும் முறை, பெறுமிடம் குறித்து விளக்குக.
17. விளம்பரங்கள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை விளக்கி எழுதுக.
18. விளம்பரத்தினால் ஏற்படும் நிறைகளையும், குறைகளையும் விளக்கி எழுதுக.

Scanned by CamScanner